**அனுப்புநர்:**

**திருமதி.ந.பரிமளாதேவி, எம்.ஏ.,**
மாவட்ட சமூகநல அலுவலர்,
சேலம்.

**பெறுநர்:**

அனைத்துத் துறை அலுவலர்கள்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சேலம் மாவட்டம்.

ந.க.எண். 6376 /ஆ4 /2014. நாள். .12.2017.

**பொருள்:** சமூகநலத்துறை – மாவட்ட சமூகநல அலுவலகம், சேலம் – அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு ஏற்படும் பாலியல் புகார் தொடர்பாக விசாரணை செய்வதற்கு விசாரணைக்குழு அமைப்பது – தொடர்பாக.

**பார்வை:**
1.சமூகநல ஆணையரக கடித எண். 58645/WW 2 ( 3 )/2013 நாள். 08.07.2014.
2.அரசு ஆணை எண். 166 சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை நாள். 29.08.2003.
3.மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரை நாள் .14.11.2017.
4.W.P.No.28264 of 2017 – High Court of Madras.
5.மாவட்ட சமூகநல அலுவலக கடிதம் இதே எண். ாள்.14.11.2017.

*****

பார்வை1–ல் காணும் சமூகநல ஆணையரக கடிதம் மற்றும் பார்வை–2ல் காணும் அரசாணையின் படி, பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு அனைத்து அலுவலகங்களிலும் விசாரணைக்குழு அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை -3ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின் படி, அனைத்து அலுவலகங்களிலும் இணைப்பில் கண்டவாறு விசாரணைக்குழு அமைத்து அதன் விபரத்தினை மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை பற்றிய நிகழ்வு அறிக்கையினை பூர்த்தி செய்து ஒவ்வொரு மாதமும் மாதந்திர அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் அலுவலகங்களிலும் மேற்காணும் பொருள் குறித்து விசாரணைக்குழு அமைத்து அதன் விவர அறிக்கையியையும் இத்துடன் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை–5ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் 14.11.2017 அன்று தங்கள் அலுவலகத்தில் விசாரணை குழு அமைக்க தெரிவிக்கப்பட்டது. ஆனால் இது நாள் வரை குழு அமைத்ததற்கான அறிக்கை ஏதும் அனுப்பப்படவில்லை. ஆதலால் இக்கடிதம் கிடைத்தவுடன் தனிகவனம் செலுத்தி குழு அமைத்த விவரத்தினை மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட சமூகநல அலுவலர்,
சேலம்.